வெளி-4: 2
*இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார்.*

# பரலோகத்தில் ஒரு சிங்காசனம்

## சிங்காசனம் இருக்கும் இடம்: (பரலோகத்தில்)

Pr.K.Joseph

**பரலோகத்தின் அமைப்பு:**
வெளி-4:1 *இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன்.*

இது நமக்குச் சொல்லும் குறிப்பு என்ன? பரலோகமானது எப்போதும் திறக்கப்பட்ட இடமாக இருக்கிறது.

**யோவானுக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பு:**
வெளி-4:1 *இங்கே ஏறிவா!*

தேவதூதனால் யோவானுக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பை நாம் இங்கே பார்க்கிறோம். எப்போதும் திறக்கப்பட்டிருக்கிற பரலோகத்தின் வாசலுக்குள் ஏறி வருமாறு நமக்கும் அழைப்புக் கொடுக்கப்படுகிறது. பூமியில் வாழும் மனிதர்கள் பரலோக அனுபவங்களைப் பெற்று பரலோக தேவனோடு உறவாட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

கொலோசயர்-3: 1-2 *கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.*

இந்த அழைப்பைக் கேட்ட யோவான் உடனே ஆவிக்குள்ளானார். அப்பொழுது அவர் *முதலாவது பார்த்தது* **சிங்காசனம்.** இந்த சிங்காசனத்தைக் குறித்த முக்கிய குறிப்புக்களை இப்பொழுது நாம் பார்க்கவிருக்கிறோம். இந்த சிங்காசனத்தோடு என்னவெல்லாம் இருந்தன என்பதைக் குறித்தும் அவைகளின் பொருள் என்ன என்பதைக் குறித்தும் நம்மிடம் தேவன் எதிர்பார்க்கும் அவருடைய ஏக்கங்களைக் குறித்தும் நாம் கற்றுக்கொள்ளப் போகிறோம்.

இதைக் கற்றுக்கொள்வதன் நோக்கம் என்னவென்றால் நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய சிங்காசனம் இருக்கும் இடத்திற்கு ஒவ்வொருநாளும் சென்று அவரோடு உறவாடும் அனுபவத்தில் வளர்வதாகும். எத்தனை பேருக்கு இந்த ஆசை உருவாகிறது?

நாம் ஜெபிக்கும்போது அனுபவிக்க வேண்டிய உன்னத அனுபவத்தைக் குறித்து இந்த நாளில் தேவன் நமக்குக் கற்றுக்கொடுப்பாராக.

***ஜெப அறைக்குள் நாம் செல்லும்போது தேவ அரண்மனைக்குள் செல்கிறோம்.***
ஜெபம் என்பது சந்தோஷம் நிறைந்ததாக, இனிமையானதாக, தேவசமூகத்தின் இன்பத்தை அனுபவிப்பதாக, தேவனுடைய மகத்துவங்களை தரிசிப்பதாக இருந்தால், நாம் ஜெபத்தை அதிகமாக உண்மையில் விரும்ப ஆரம்பித்து விடுவோம். அநேக நேரங்களில் நமது ஜெபமானது வறட்சியானதாக, போரடிப்பதாக, கடமைக்காகச் செய்வதாக இருக்கிறது. காரணம் நாம் ஜெபிக்கும் போது என்ன நடக்கிறது, எந்த இடத்திற்குள் செல்ல முடியும் என்பதைக் குறித்து நாம் சரியாக அறியாமல் இருப்பது தான். அநேகருக்கு ஜெபிக்க முடியவில்லை. பலருக்கு ஜெபிக்கப் பிடிக்கவில்லை, காரணம் என்ன?

**1. சிங்காசனத்தின் மேல்:**
வெளி–4: 2 *அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார்.*
அவர் யார் என்பதைக் குறித்தும் அவருடைய மகத்துவத்தைக் குறித்தும் பிறகு பார்க்கலாம்

**2. சிங்காசனத்தைச் சுற்றிலும்:**
வெளி–4: 3 *அந்தச் சிங்காசனத்தைச்சுற்றி ஒரு வானவில்லிருந்தது.*
வானவில்லைக் குறித்தும் அதன் தன்மையைக் குறித்தும் பிறகு பார்க்கலாம்.

வெளி–4: 4 *அந்தச் சிங்காசனத்தைச்சூழ இருபத்துநான்கு சிங்காசனங்கள் இருந்தன, இருபத்துநான்கு மூப்பர்கள் வெண்வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி, அந்தச் சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்திருக்கக்கண்டேன்.*

**3. சிங்காசனத்திலிருந்து:**
வெளி–4: 5 *அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன.*
பார்க்க வைக்கிற மின்னலின் ஒளியும், கேட்க வைக்கிற இடி மற்றும் சப்தங்களின் ஒலியும் வெளிப்பட்டன. (ஒளியும் ஒலியும்). வெளிச்சமும் சப்தமும் கவனத்தைத் திருப்பக்கூடியவைகளாக இருக்கின்றன.
உதாரணத்திற்கு வானவேடிக்கையில் பட்டாசுகள் பயன்படுத்துவது.

**4. சிங்காசனத்திற்கு முன்பாக:**
வெளி–4: 5 *தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன.*

தேவனுடைய ஏழு ஆவிகள் என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் ஏழு முக்கிய செயல்பாடுகளைக் குறித்து ஏசாயா–11: 2ல் பார்க்கிறோம்.
*ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும்,*
*ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும்,*
*அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய*
*கர்த்தருடைய ஆவியானவர்.* இதைக் குறித்து நீங்கள் படித்து அறிந்துகொள்ளுங்கள்.

வெளி–4: 6 *அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடிக் கடலிருந்தது.*

கண்ணாடிக்கடலைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷத்திலே பல குறிப்புகள் உள்ளன. அவைகளை நீங்கள் ஆராய்ந்து கண்டுபிடிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

**5. சிங்காசனத்தின் மத்தியிலும் அதைச் சுற்றிலும்:**
வெளி–4: 6 *அந்தச் சிங்காசனத்தின் மத்தியிலும் அந்தச் சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன.*

இந்த நான்கு ஜீவன்களும் சேராபீன்கள் என்று நம் அறிந்துகொள்ள முடிகிறது. இதே சிங்காசனத்தின் இடத்தைக் குறித்து ஏசாயா பார்த்த போதும் எசேக்கியேல் பார்த்த போதும் அங்கே சேராபீன்கள் இருந்ததைக் குறித்து அவர்கள் கூறுவதைப் பார்க்கிறோம்.

ஏசாயா–6: 1–2
எசேக்கியேல்–1: 5–14

இந்த வசனங்களைப் படித்து அந்த நான்கு ஜீவன்களைக் குறித்து இன்னும் விபரங்களை அறிந்து கொள்ளுங்கள். வசனங்களை நீங்கள் படிக்கும்போது, விளக்கத்தைக் கற்றுத்தருமாறு ஆவியானவரிடம் ஜெபித்து வாசியுங்கள்.

இந்த ஜீவன்கள் என்ன செய்துகொண்டிருக்கின்றன என்பதைக் குறித்து மாத்திரம் இப்பொழுது சொல்லிவிட்டு, இந்தக் கடைசிக் காலத்தில் தேவன் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டி ஜெபித்து முடிக்க விரும்புகிறேன்.

வெளி-4: 8 *அவைகள்: இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன.*

''அவைகள்'' என்பது அந்த நான்கு ஜீவன்களைக் குறிக்கிறது. அவைகள் இரவும் பகலும் ஓய்வில்லாமல் தேவனாகிய கர்த்தரை உயர்த்திக்கொண்டே இருக்கின்றன. ''பரிசுத்தர்'' என்பது தேவனுடைய அழகை வர்ணிக்கும் ஒரு சிறப்பு வார்த்தையாகும்.

*இரவும் பகலும் ஓய்வில்லாமல்*

தேவனை ஆராதித்திட, தேவனுடைய அழகை இரசித்திட, தேவனுடைய பாதத்தில் அவரைப் பணிந்து தொழுதிட, தேவனை மகிமைப்படுத்திட இடைவெளியோ, ஓய்வோ கிடையாது.

இடைவிடாமல், எப்போதும், இரவும் பகலும், ஓய்வின்றி, 24 மணி நேரமும் 7 நாட்களும், தொடர்ந்து ஏன் தேவனுக்குத் துதியும் ஜெபமும் ஏறெடுக்கப்பட வேண்டும் என்பதை தேவன் நமக்கு வெளிப்படுத்துவாராக.

அன்பு நிறைந்த பரலோகத் தகப்பனே!
நாங்கள் ஜெபிக்கும்போது உம்முடைய சிங்காசனம் இருக்கும் அரண்மனைக்குள் வருகிறோம் என்ற வெளிப்பாட்டைப் பெற்று அந்த அனுபவத்திற்குள் வந்திட எங்களுக்குத் துணை செய்வீராக. ஜெப அறைக்குள் வந்து மகிழ்வோடும் உற்சாகத்தோடும் நாங்கள் ஜெபித்து, உன்னத அனுபவத்தில் வளர்ந்திட நீர் எங்களுக்கு உதவி செய்வீராக. ஜெபத்தின் இனிமையை அனுபவிக்க விடாதவாறு எங்களைத் தடைசெய்கிற, திசைதிருப்புகிற எல்லாத் தடைகளும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அகன்றுபோவதாக. நாங்கள் உம்மிடத்தில் வரவேண்டும் என்று நீர் ஏங்குகிறீர், ''இங்கே ஏறிவா!'' என்று நீர் எங்களை அழைக்கும் சத்தம் எங்கள் செவிகளில் எப்போதும் தொனிப்பதாக! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் தகப்பனே! ஆமென்.